| | | | | |
|---|---|---|---|---|
| **கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சை – 2020**<br>**மன்னார் கல்வி வலயம்** | | | | |
| **வணிகக் கல்வி - 11** | **32** | **T** | **II** | 03 மணித்தியாலயம்<br>**(மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடம்)** |

**விடைகள்**

**பகுதி - I**

**வினா இல – 01**

i. அ. மாற்றமடையும் சிக்கலான தேவைகளை நிறைவு செய்தல்.
புத்துருவாக்கம்.
வேலைவாய்ப்புக்களை உருவாக்கல்.
தேசிய பொருளாதார அபிவிருத்தி. (½x4 = 2புள்ளிகள்)

ஆ. வேலையின்மை / வேலையிழப்பு.
பண வீக்கம்.
பொருட்கள் சேவைகளின் தட்டுப்பாடு.
பாரிய தொழிற்சாலைகள் மூடப்படல்.
அந்நியச் செலாவணிப் பிரச்சினை / பற்றாக்குறை.
உற்பத்தி குறைவடைதல்.
வெளிநாட்டு வியாபாரம் பாதிப்படைதல்.
வறுமை நிலை அதிகரிப்பு. (½x4 = 2புள்ளிகள்)

ii. பேரளவு உற்பத்தி.
இயந்திர மயமாக்கல்.
அதிகமான வேலைவாய்ப்பு.
தொழிற்பிரிப்பு, சிறப்புத் தேர்ச்சி.
நவீன முகாமைத்துவமுறையின் பயன்பாடு. (4x 1= 4புள்ளிகள்)

iii. அ. உலக ரீதியான பரந்த சந்தை வாய்ப்பு.
அளவுத்திட்ட சிக்கனம் பெற முடிதல்.
வேலைவாய்ப்பு உருவாக்கம்.
நவீன தொழிநுட்பங்களை பெற முடிதல்.
புதிய அறிவுப்பரிமாற்றம்.
தரமான உள்ளீடுகளை பெற முடிதல்.
உட்கட்டமைப்பு மற்றும் வணிக சேவைகளின் அபிவிருத்தி.
வெளிநாட்டு முதலீடுகள் கிடைக்கப் பெறல். (½x4 = 2புள்ளிகள்)

ஆ. மக்கள் சூழல் - சனத்தொகை மாற்றம்.
இயற்கைச் சூழல் - கொள்ளை நோயின் தோற்றம்.
பொருதாரச் சூழல் - ஏற்பட்டுள்ள பொருளாதார ரீதியான பிரச்சினை.
தொழிநுட்ப சூழல் - மருத்துவத் துறையில் கொள்ளை நோய்க்கான புதிய கண்டுபிடிப்பு. பூகோளச் சூழல் - பூகோளமயமான சந்தை
(½x4 = 2புள்ளிகள்)

iv. அ. வெளிநாடுகளின் அரசாங்கத்துடன் சிறந்த உறவைப் பேணுதல்.
உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல்.
சுற்றுலாத்துறை மீதான முதலீடுகளை அதிகரித்தல்.

நாட்டில் அமைதியான சூழ்நிலையை தொடர்ந்து பேணுதல்.
சுற்றுலாத்துறை மீதான பயனுறுதியான மேம்படுத்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- (½x4 = 2புள்ளிகள்)

ஆ. <u>வாய்ப்புக்கள்</u>

1. Hotel - உணவு விடுதிகள்,
2. போக்குவரத்துச் சேவை - Pick Me, Tuk Tuk, Uber போன்ற சேவைகள்
3. நாணயமாற்றுச் சேவை - வணிக வங்கிகள், ஏனைய அங்கீகரிக்கப்பட்டவர்கள்.
4. விமானப் பயண ஒழுங்கை ஏற்படுத்திக் கொடுக்கும் நிறுவனங்கள் - Yaana, BOC Travels, Hayleys Travels
5. பாரிய கடைத் தொகுதிகள் - Liberty Pilaza, Majesty City, Duty Free Shop

<u>அச்சுறுத்தல்கள்</u>

வியாபார நிலையங்கள் - பாதையோர வியாபாரக்கடைகள் நீக்கப்படல். கடனட்டை, வரவட்டை பயன்பாட்டை சிறப்புச் சந்தைகளில் கட்டாயமாக்குதல்.

போக்குவரத்துச் சேவை - Meter Texi பாவனையை கட்டாயமாக்கல், முழு சொகுசு பஸ் சேவையை கட்டாயமாக்கல்
- (½x4 = 2புள்ளிகள்)

v. அ. 1. ஊழியர்கள்
2. சமூகம்
3. வாடிக்கையாளர்
4. உரிமையாளர் (½x4 = 2புள்ளிகள்)

ஆ. 1. வணிகத்தின் வாழ்தன்மை உறுதிப்படுத்தப்படும்
2. வணிகத்தின் நன்மதிப்பு விருத்தியடையும்
3. வணிகம் பற்றிய பிரதிமை விருத்தியடையும்
4. வணிகம் தொடர்பான நம்பகத்தன்மை உறுதி செய்யப்படும்
5. இலாபத்தை உச்சப்படுத்த முடியும்
6. வாடிக்கையாளர் விசுவாசம் அதிகரிக்கும்
7. போட்டிகளை வெற்றி கொள்ளலாம் (½x4 = 2புள்ளிகள்)
8. அரச ஊக்குவிப்பு, ஏனைய வசதிகளை பெற்றுக்கொள்ளலாம்

## வினா இல – 02

i. வணிகப் போட்டி - கடுமையான போட்டி காரணமாக வணிக ஒழுக்கங்ஙுழுக்கு அமைவில்லாத பல்வேறு செயற்பாடுகளில் ஈடுபட்டு வருதல்
பூகோள மயமாதல் - தடையற்ற வர்த்தக செயற்பாடுகள் காரணமாக கலாசாரத்திற்கு முரணான பொருட்கள் சேவைகளின் நுகர்வு
இலத்திரனியல் வணிகம் பல்வேறு மோசடிகளும் குளறுபடிகளும் இடம்பெறுவதற்கான வாய்ப்புகள் அதிகம்
சூழல் மாசடைதல் தொழிற்சாலைகள் அதிகரிப்பு உற்பத்தி பெருக்கம் போன்றவற்றால்

சூழல் மாசு - மட்டம் அதிகரித்தல்
(1x4 = 4புள்ளிகள்)

ii. அ. உரிமையாளர் :- இலாபம் அதிகரிக்கும்
வணிக நன்மதிப்பு உயர்வடையும்
வணிகம் வளர்ச்சியடையும்

ஊழியர்கள் :- தொழில் பாதுகாப்பு ஏற்படும்
ஊழியர்களின் மதிப்பும் அங்கிகாரமும் அதிகரிக்கும்

வாடிக்கையாளர்கள் :- நியாயமான விலையில் டரமான பொருட்களைப் பெறலாம் பாதிப்புக்கள் குறைவடையும்

சமூகம் :- சமூக நல சேவைகள் அதிகரிக்கும்
சூழல் பாதுகாக்கப்படும்
வேலைவாய்ப்புக்கள் கிடைத்தல்
- (½x4 = 2புள்ளிகள்)

ஆ. 1. மானிட பல்லினத் தன்மைக்கு மதிப்பளித்தல்
2. மனித உரிமைகளை பாதுகாப்பதற்குப் பங்களிப்புச் செய்தல்
3. சமத்துவத் தன்மையுடன் கருமமாற்றி சமமான சந்தர்ப்பங்களை வழங்குதல்
4. கல்வி, சுகாதபரம், போக்குவரத்து போன்ற அத்தியாவசியத் தேவைகளுக்கு பங்களிப்புச் செய்தல் 5. பல்லினத் தன்மைகொண்ட கலாசாரத்தை மதித்து அவற்றைப் பாதுகாப்பதற்கு பங்களிப்பு செய்தல் 6. சமூகப் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு பங்களிப்புச் செய்தல் 7. சட்டத்தையும் சமாதானத்தையும் பாதுகாப்பதற்கு பங்களிப்பு செய்தல் (½x4 = 2புள்ளிகள்)

iii. 1. இரத்தினக்கல், காரியம், ஏனைய கனிப்பொருட்கள்
2. கல், மண், மணல் போன்றவை
3. மர வியாபாரம்
4. அருமையான தாவரங்கள், மூலிகைத் தாவர வியாபாரங்கள்
5. கடல்சார் உற்பத்திகள் (1x 4= 4புள்ளிகள்)

iv. அ.

| நேர் வரி | நேரில் வரி |
|---|---|
| 1. பிறர்மீது சுமத்த முடியாது | பிறர்மீது சுமத்த முடியும் |
| 2. வருமானம், உழைப்பின் மீது அறவிடப்படும் | பொருட்கள் சேவைகள் மீது அறவிடப்படும் |
| 3. தெரிவு செய்யப்பட்ட குழுவினர் மீது விதிக்கப்படும்.<br>உ-ம் வருமான வரி, கம்பனி வரி, மூலதன இலாப வரி | எல்லோர் மீதும் விதிக்கப்படும்<br>உ-ம் சுங்க வரி, உற்பத்தி வரி |

(½x4 = 2புள்ளிகள்)

ஆ. அறியும் விளக்கத்துடன செயற்படல் - தரம்,விலை,நியமம் போன்றவிடயங்களை அறிதல்.

வெயற்பாட்டு ரீதியாக பங்களித்தல் - நியாயமான நிலையை வெளிக்காட்டுதல்.

சமூகம் தொடர்பாக வெளிக்காட்டுதல் - நுகர்வின் மூலம் ஏற்படக்கூடிய பாதிப்புக்களைஉணர்த்துதல்

சூழல் பற்றிய விழிப்புணர்வு - நிகழ்கால, எதிர்காலத்தினை கவனத்திற் கொண்டு

வளங்களின் பாவனையை மேற்கொள்ளல்.

ஒத்துழைப்பு / ஐக்கியப்படல் - நுகாவோர் உரிமை, நுகர்வோர் பாதுகாப்பு என்பன

தொடர்பில் ஏனையவர்களுடன் இணைந்துசெயலாற்றுதல்.

(½x4 = 2புள்ளிகள்)

v. 1. உற்பத்தி செயன்முறைகளை ஒழுங்குபடுத்தி அவைதொடர்பாக தேசிய, சர்வதேச அடிப்படையில் தர நியமங்களைத் தயாரித்தல்.

2. கைத்தொழில் வர்த்தக செயற்பாடுகளில் நியமப்படுத்தலையும் தரக்கட்டுப்பாட்டினையும் விருத்தி செய்தல், அதற்காக ஆய்வுகூட வசதி, மற்றும் நூல் நிலைய சேவைகளையும் லழங்குதல்.

3. இறக்குமதி செய்யப்படும் பொருட்கள் உரிய தர நியமங்களுக்கு ஏற்புடையதா என்பதை பரிசோதித்து உறுதிப்படுத்துதல்.

4. தரநியமக் குறியீட்டு முறைமையினை நடைமுறைப்படுத்தல்.

5. சர்வதேச தர நிறுவனத்துடனும் மற்றும் அதற்கு சமமான கருமங்களில் ஈடுபட்டுள்ள அமைப்புக்களுட னும் ஒத்துழைத்து கருமமாற்றுதல்.

6. கல்வி, ஆலோசனை மற்றும் ஏனைய முறைகள் மூலம் தர நியமப்படுத்தலையும் தரக்கட்டுப்பாட்டையும் ஊக்குவித்தல்.

(1x 4= 4புள்ளிகள்)

## வினா இல – 03

i. 1. பங்குடைமை வணிகத்தை ஆரம்பித்தல் ஒப்பீட்டு ரீதியில் இலகு
2. கணக்கு வைப்பு, கணக்காய்வு கட்டாயமில்லை என்பதனால் குறைவான செயற்படுத்தும் செலவு
3. பல்வேறு திறன் கொண்டவர்களை புதிய பங்காளர்களாக சேர்த்துக் கொள்ள முடிதல்
4. ஒப்பீட்டு ரீதியில் வணிகத்தைக் கலைத்தல் இலகு
5. இயக்குனர்சபை தேவையற்றதால் ஒப்பீட்டு ரீதியில் குறைவான நிர்வாகச் செலவு
- (1x 4= 4புள்ளிகள்)

ii. 1. வேகமாக மாற்றமடைந்து வரும் உலக மாற்றங்களுக்கு எதிர் விளைவைக் காட்டக்கூடிய - புத்தாக்கங்களை கண்டுபிடிப்பதற்கு
2. போட்டி வணிகங்களுடன் தொடர்ந்து நிலைத்திருப்பதற்கும், புத்தாக்கங்களை உருவாக்குவதற்கும்
3. மாற்றமடைந்து வரும் உலகிற்கு தலைமைத்துவத்தை வழங்குவதற்கு
4. தனிநபர் தேவை, விருப்பங்களை உயர் மட்டத்தில் நிறைவு செய்வதற்கும், வாழ்க்கைத்தரத்தை - உயர்த்துவதற்கும் புத்தாக்கம் புனைதலின் தேவைப்பாடும்

5. புதிய தொழிநுட்பங்களுக்கேற்ப வணிகக் கருமங்களை விருத்தி செய்வதற்காக
6. புதிய வணிகங்களை ஆரம்பிப்பதனூடாக தொழில் வாய்ப்புக்களை உருவாக்கல்

(1x 4= 4புள்ளிகள்)

iii. **வெற்றியில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள்........**

1. உட்கட்டமைப்பு வசதிகள் போதியளவு காணப்படல்
2. நிதி மற்றும், வரி விடுதலை போன்ற ஊக்குவிப்புக்கள்
3. விரிவான சந்தை காணப்படல்
4. பல்வேறு நிறுவனரீதியான மற்றும் சந்தைப்படுத்தல் வசதிகள் கிடைக்கப் பெறல்
5. திறனான முகாமைத்துவம்
6. வணிகங்களின் ஈடுபாடும் அர்ப்பணிப்பும் (½x4 = 2புள்ளிகள்)

**தோல்வியில் செல்வாக்குச் செலுத்தும் பாரணிகள்........**

1. நிதிப் பிரச்சினை
2. பலவீனமான முகாமைத்துவம்
3. முயற்சியாண்மைத் திறன் குறைவு
4. சந்தைப்போட்டி நிலைக்கு முகங்கொடுப்பதில் சிரமம்
5. போதியளவு உட்கட்டமைப்பு வசதிகள் காணப்படாமை
6. குறைவான தொழிநுட்ப அறிவு (½x4 = 2புள்ளிகள்)

iv. அ. உ-ம்
1. சென்ரல் பினான்ஸ் வென்சர் பண்ட் லிமிட்டட்
2. இலங்கை வென்சர் லிமிட்டட்
3. NDB வென்சர் இன்வெஸ்மென்ட் (தனி)க் கம்பனி
4. பணித்துறை (½x4 = 2புள்ளிகள்)

பணிகள்

1. புதிய வணிகங்களை ஆரம்பிக்க நிதி வழங்குதல் . 2. தற்போதுள்ள வணிகத்தை விரிபடுத்த நிதி வழங்கல். 3. வணிகமொன்றை கொள்வனவு செய்தல் அல்லது கையகப்படுத்தலின்போது நிதி வழங்கல். 4. பங்கு உத்தரவாதம் அளித்தல் கருமங்களில் ஈடுபடல். 5. கடன் ஒழுங்கமைத்தல் கருமங்களில் ஈடுபடல் (½x4 = 2புள்ளிகள்)

ஆ. 1. உள்ளூராட்சி மன்றம், நகர சபை, பிரதேச சபை என்பவற்றின் கீழ் நடாத்திச் செல்லப்படல் 2. உரிமையானது அந்தந்த உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு உரித்துடையதாக இருத்தல் 3. தேவையான நிதி உள்ளூராட்சி நிறுவனங்களினால் அல்லது மத்திய அரசினால் வழங்கப்படும் 4. நிர்வாகமானது உள்ளூராட்சி நிறுவன அதிகாரிகளினால் மேற்கொள்ளப்படும் (½x4 = 2புள்ளிகள்)

v. அ. 1. தனியார்துறை நியாயமற்ற முறையில் இலாபம் உழைப்பதை கட்டுப்படுத்துவற்கு
- உ-ம் பொதுப்போக்குவரத்து சேவைகள், தொடாபாடல் சேவைகள்

2. தனியுரிமை நிறுவனங்கள் உருவாகுவதைத் தடுப்பதற்கு
- உ-ம் காப்புறுதி, நிதி

3. பொதுமக்களுக்கு அத்தியாவசிய பொருட்களை வழங்குவதற்கு
- உ-ம் கல்வி, சுகாதாரம்

4. வள விரயங்களைக் குறைத்தல்
- உ-ம் நீர் வழங்குதல், மின்சார சேவை

5. இலாப நோக்கற்ற தனி நபர், வணிக அபிவிருத்தித் திட்டங்கள்
- உ-ம் நீர் வழங்கல் திட்டமும் மின்சார விநியோகமும் (1x 2= 2புள்ளிகள்)

ஆ. **அநுகூலம்**

1. வினைத்திறனை அதிகரித்தல்
2. புத்தாக்கங்களின் உருவாக்கம்

3. போட்டித் தன்மை அதிகரித்தல்.
4. அரச செலவீனங்களைக் குறைத்தல்

**வரையறைகள்**
1. விலை அதிகரிப்பு
2. அரச கட்டுப்பாடு இன்மையால் வள விரயம் காணப்படல்
3. அரச வருமானம் குறைவடைவதனால் மக்களுக்கு வழங்கும் வேவை குறைவாக காணப்படல் 4. சமூக நலக்கொடுப்பனவுகள் குறைவு (பொருட்கள், சேவைகள்) (1x 2= 2புள்ளிகள்)

## வினா இல – 04

i. அ. கூட்டிணைக்கப்பட்ட பொதுக்கம்பனிகளது பங்குகளையும், தொகுதிக்கடன்களையும் விற்பனை செய்தல், கொள்வனவு செய்தல் தொடர்பான இடைநடுவக் கருமங்களை மேற்கொள்ளும் நிறுவனங்கள் பங்குத்தரகர் நிறுவனங்கள் எனப்படும்.
உ-ம் HNB பங்குத்தரகர் தனியார் கம்பனி
- DFCC பங்குத்தரகர் தனியார் கம்பனி
- John Keeels பங்குத்தரகர் தனியார் கம்பனி
- Ceylinco பங்குத்தரகர் தனியார் கம்பனி
(1புள்ளி)

<u>**பணிகள்**</u>

1. பங்குகளிலும், தொகுதிக்கடன்களிலும் முதலீடு செய்வது தொர்பாக ஆலோசனை வழங்குதல். 2. முதலீட்டாளர்களின் கொள்வனவு விற்பனைகளை பொறுப்பேற்று நடைமுறைப்படுத்தல்.
3. முதலீட்டாளர்களின் பெயர்களில் மத்திய வைப்பக முறையில் கணக்குகளை திறக்க உதவும்.
4. கம்பனியின் பங்குகளை பட்டியல்படுத்த அனுசரணை வழங்குதல்.
5. வரையறுத்த பொதுக்கம்பனிகளின் மூலதனத் தழட்டலுக்கு உதவுதல்.
6. பட்டியல்படுத்தப்பட்ட கம்பனிகளின் வெளியீடுகளை பிரசித்தப்படுத்தல்.
7. பங்குச்சந்தையை பகுப்பாய்வு செய்து சந்தையாய்வு அறிக்கைகளை வெளியிடுவதன் மூலம் - முதலீட்டாளர்களுக்கு பயனுள்ள தகவல்களை வழங்குதல். (1புள்ளி)

ஆ. 1. வாடகைக் கொள்வனவு வசதிகள் வழங்கல்
2. ஆதனம், காணி, வியாபாரம் செய்தல்.
3. குத்தகை நிதியீட்டம்.
4. கடன்வழங்கல்.
5. அரச பிணைப்பத்திரங்களில் முதலீடு செய்தல்.
6. கால வைப்புக்களை ஏற்றுக் கொள்ளல். (½x4 = 2புள்ளிகள்)

ii. அ. 1. இலத்திரனியல் பணத்தின் வளர்ச்சி.
2. பல்வேறு காரணங்களால் பல்வேறு காசோலைகள் வங்கிகளால் பணம் வழங்க மறுக்கப்படல். 3. நடைமுறைக்கணக்கிறகான உயர்வான கட்டணங்கள்.. 4. பெரும்பாலான வணிகங்களுக்கு காசோலைப் பயன்பாடு தொடர்பான அறிவு குறைவாக இருத்தல். 5. வங்கி மேலதிகப்பற்றிற்கு கூடுதல் வட்டி அறவிடப்படல். (½x4 = 2புள்ளிகள்)

ஆ. 1. வாடிக்கையாளர்களுக்கான விழிப்புணர்வுக் கூட்டங்களை ஏற்படுத்தல்.
2. நிறுவனங்களுக்கிடையிலான தொடர் வலையமைப்பு வசதிகளை ஏற்படுத்தல்.

3. கவர்ச்சிகரமான ஊக்குவிப்புக்களை வழங்குதல்.

4. மோசடிகளைக் கட்டுப்படுத்த பாதுகாப்புடன் கூடியதான அட்டைகளை வழங்குதல்.(½x4 = 2புள்ளிகள்)

iii. அ. 1. இரட்டைக் காப்புறுதி.
2. பங்களிப்புத் தத்துவம்.
3. A. ரூ. 2666666.67 B. ரூ. 1.333333.33 (½x4 = 2புள்ளிகள்)

ஆ.

| இடர்கள் | காப்புறுதி ஒப்பந்தம் |
|---|---|
| மோட்டார் வாகன விபத்து | பூரண மோட்டார் வாகனக் காப்புறுதி |
| தேயிலைக்கு ஏற்படும் சேதம் | பொருட்களுக்கான காப்புறுதி |
| களவு | களவபாயக் காப்புறுதி |
| மோட்டார் வாகனம் | மூன்றாம் நபர் காப்புறுதி |
| தொழிற்சாலைக்கு or உபகரணங்களுக்கு ஏற்படும் சேதம் | தீ அபாயக் காப்புறுதி |
| ஊழியர்களுக்கு ஏற்படும் இழப்பு | ஊழியர் பொறுப்புக் காப்புறுதி |
| தொழிற்சாலை நடவடிக்கைகளால் பொதுமக்களுக்கு ஏற்படும் இழப்பு | பொது (மக்கள்) பொறுப்புக் காப்புறுதி |
| தேயிலையை நுகர்வதால் ஏற்படக் கூடிய இடர் | உற்பத்திப் பொருள் பொறுப்புக் காப்புறுதி |
| ஏற்றுமதிக்கான பணம் கிடைக்காமை | ஏற்றுமதி கொடுப்பனவு காப்புறுதி |

(½x4 = 2புள்ளிகள்)

iv. அ. 1. திருத்தமானதாக/செம்மையானதாக காணப்படும்.
2. சுருக்கமானதாகக் காணப்படும்.
3. முழுமையானது/பூரணத்துவமுடையதாகக் காணப்படல்.
4. தெளிவானதாகக் காணப்படல்.
5. உறுதியானதாகக் காணப்படல்.
6. கிரயம் குறைவானதாகக் காணப்படல்.
7. நெறிமுறைக்குட்பட்டதாகக் காணப்படல்.
8. அங்கிகரிக்கக்கூடியதாகக் காணப்படல் (½x4 = 2புள்ளிகள்)

ஆ. 1. சாரதி அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கான வயதுக்கட்டுப்பாட்டை அதிகரித்தல் வேண்டும். 2. சாரதி அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கான நியமத்தினை (Standard) அதிகரித்தல் வேண்டும். 3. வீதிப்போக்குவரத்து விதிகளை மீறுவோர்களுக்கான கட்டணங்களை அதிகரித்தல் வேண்டும். 4. வீதி சமிஞ்சைகள் மற்றும் குறியீடுகளை ஒவ்வொரு வீதியிலும் காட்சிப்படுத்தல்.
5. வீதிப்பாதுகாப்புத் தொடர்பான பொதுமக்களுக்கான அறிவூட்டல் பொதுசன ஊடகங்கள் ஊடாக . மேற்கொள்ளப்படல் வேண்டும்.
(½x4 = 2புள்ளிகள்)

v. ஆ. 1. இறக்கமதிகளை மட்டுப்படுத்தல்/தெரிவு செய்த பொருட்களுக்கான இறக்குமதி வரையறை. 2. ஏற்றுமதிகளை மட்டுப் படுத்துதல்/ தெரிவு செய்த பொருட்களுக்கான ஏற்றுமதி வரையறை.
3. ஏற்றுமதி இறக்குமதிகளைத் தடை செய்தல்./சில நாடுகளின் சில பொருட்களின் ஏற்றுமதி, - இறக்குமதிகளுக்கு தடை
4. வியாபார ஒப்பந்தங்கள்/இரு, பல்பக்க ஒப்பந்தங்களால் ஏற்றுமதி, இறக்குமதியை

வரையறுத்தல்
5. இறுக்கமான வெளிநாட்டு செலாவாணிக் கொள்கை/வெளிநாட்டு செலாவாணிப் பிரச்சினைகளால் - செலாவாணிக் கொடுக்கல் வாங்கல் தொடர்பான கடுமையான சட்ட அமுலாக்கம் -
(½x4 = 2புள்ளிகள்)

அ. 1. மிகை உற்பத்திகளை ஏற்றுமதி செய்ய முடிதல்.
2. நாட்டில் ஏற்றுமதி செய்ய முடியாத பொருட்களை இறக்குமதி செய்ய முடிதல்.
3. அந்நியச் செலாவாணியை உழைத்துக்கொள்ள முடிதல்
4. பொருளாதார ரீதியான சிக்கனங்களை பெற்றுக் கொள்ள முடிதல்
5. சர்வதேச தொடர்புகள், ஒத்துழைப்புக்கள் விருத்தியடைதல். (½x4 = 2புள்ளிகள்)

## வினா இல – 05

i. அ. சிறந்த செயற்பாடுடையதாக இருத்தல்
நீடித்த பாவனை அல்லது நீண்ட காலம் நிலைத்திருத்தல்
நம்பகத் தன்மையைக் கொண்டிருத்தல்
உரிய கருமங்களுக்கு பொருத்தமாக இருத்தல்
பாதுகாப்பானதாக இருத்தல்
நியமங்களுக்கு ஏற்புடையதாக இருத்தல் (½x4 = 2புள்ளிகள்)

ஆ. தரவட்டம் / தரச்சுற்று
பூச்சிய வழு நுட்பம் (பூச்சிய குறைபாடுகள்)
தரபாதுகாப்பு / தர உறுதி
தர நியமம்
புள்ளிவிபர ரீதியிலான செயன்முறைக் கட்டுப்பாடு
மொத்தத்தர முகாமைத்துவம்- (½x4 = 2புள்ளிகள்)

ii. அ. கணனி உதவியுடனான வடிவமைப்பு
கணனி உதவியுடனான உற்பத்தி
கணனி யுடன் இணைந்த உற்பத்தி
கணினிமயப்படுத்தப்பட்ட எண்சார்க் கட்டுப்பாடு. (½x4 = 2புள்ளிகள்)

ஆ. i. மூலப் பொருள் உற்பத்தித் திறன் = $\frac{\text{வெளியீடு}}{\text{மூலப்பொருள்}} = \frac{15000}{3000} = 5$

ii. உழைப்பு உற்பத்தித் திறன் = $\frac{\text{வெளியீடு}}{\text{ஊழி.மணி.எண்}} = \frac{15000}{1500} = 10$ (1x 2 = 2புள்ளிகள்)

iii. அ. பொருட்கள் :- 1. உற்பத்திக் கருமத்திற்கான பொருட்கள் (மூலப்பொருள், மூலதனப் - பொருட்கள், உதிரிப்பாகங்கள், எரிபொருட்கள்) - 2. நுகர்வுக்கான பொருட்கள் (எழுதுபொருட்கள், காரியாலய உபகரணங்கள்)
சேவைகள் :- பராமரிப்புச் சேவை, போக்குவரத்துச்சேவை, மின்சாரச் சேவை, - சுத்திகரிப்புச்சேவை (½x4 = 2புள்ளிகள்)

ஆ. 1. பொருட்களின் தேவைப்பாட்டினை கொள்வனவுப்பகுதிக்கு அறிவித்தல்.
2. வழங்குனரிடமிருந்து விலை மனுக்களைக் கோருதல்

3. பொருத்தமான வழங்குனர்களை தெரிவு செய்தல்.
4. தெரிவு செய்யப்பட்ட வழங்குனருக்கு கொள்வனவுக் கட்டளை அனுப்புதல்
4. பொருட்களைப் பெற்று களஞ்சிய பிரிவுக்கு அனுப்புதல்
5. பணக்கொடுப்பனவை மேற்கொள்ளல் (½x4 = 2புள்ளிகள்)

iv. அ

| தலைவர் | முகாமையாளர் |
|---|---|
| உதவியாளர்களை தன்னை பின்பற்ற வழிகாட்டுவார் | ஊழியர்களை கட்டுப்படுத்துவர் |
| தனித்திறமையால் தலைவர் ஆவர் | பதவி மூலமாக முகாமையாளராவார் |
| குழுக்களின் நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு தமது கருமங்களை நிறைவேற்ற முயற்சிப்பார் | நிறுவன நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு தமது கருமங்களை ஆற்றுவார் |
| சவால் நிறைந்த இலக்குகளை அமைத்துக் கொள்வார் | அடையக்கூடிய இலக்குகளை அமைத்துக் கொள்வார் |
| சந்தர்பத்திற்கமைவாக தீர்மானம் எடுப்பார் | சட்ட விதிகளுக்கமைவாக தீர்மானம் எடுப்பார் |
| நீண்டகால நோக்குடையவர் | குறுங்கால நோக்குடையவர் |
| மாற்றங்களை புதிய முறையில் மேற்கொள்வார் | மாற்றங்களை பாரிய முறையில் மேற்கொள்வார் |

(½x4 = 2புள்ளிகள்)

ஆ. <u>தலைவர் கருமமாற்றுகின்ற முறைக்கேற்ப</u>
1. சர்வாதிகார தலைவர்
2. ஜனநாயகத் தலைவர்
3. தலையிடாத் தலைவர்

<u>தலைவரின் நடத்தைப் பாங்கிற்கேற்ப</u>

1. குறிக்கோளை மையப்படுத்திய தலைவர்
2. ஊழியரை மையப்படுத்தும் தலைவர் (½x2 = 1புள்ளி)

| ஜனநாயகத் தலைவர் | தலையிடாத் தலைவர் |
|---|---|
| தனக்கு கீழுள்ளவர்களின் கருத்துக்களை கவனத்திற் கொண்டு செயற்படுகின்றவர் | தனக்குக் கீழ் வேலை செய்பவர்களுக்கு கூடிய சுதந்திரத்தை வழங்குபவர் |
| தலைவரால் தீர்மானம் எடுக்கப்படும் | ஊழியர்களால் தீர்மானம் எடுக்கப்படும் |
| எல்லோரினதும் ஒத்துழைப்பைப்பெற பொருத்தம் | குழு வேலைக்குப் பொருத்தம் |
| தலைவரின் அழுத்தம் காணப்படும் | தலைவரின் அழுத்தம் காணப்படாது |

(½x2 = 1புள்ளி)

v. அ. நிலையான கிரயம் :- உற்பத்தி செய்யப்படும் அலகுகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப மாற்றமடையாத கிரயம். (உ-ம்) தொழிற்சாலை வாடகை, இறைக்கட்டணம்.

மாறும் கிரயம் :- உற்பத்தி செய்யப்படும் அலகுகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப மாற்றமடையும் கிரயம். (உ-ம்) நேர் பொருட் கிரயம், நேர் கூலிக்கிரயம். (½x2 = 1புள்ளி)

ஆ. மொத்த நிலையான கிரயம் = 1500 = 10அலகுகள் (½x2 = 1புள்ளி)

அலகொன்றின் பங்களிப்பு 150

## வினா இல – 06

i. 1. உரிய தரங்களைக் கொண்ட பொருட்களை வழங்க முடியும்
2. வீண்விரயங்களை குறைக்க முடியும்
3. போட்டி நிலைமைகளுக்கு வெற்றிகரமாக முகங்கொடுப்பதற்கும் தொடர்ச்சியாக சந்தையில் - நிலைத்திருப்பதற்கும் உதவுதல்
4. நுகர்வோர் திருப்தியை உச்சப்படுத்தி நுகர்வோர்களின் பக்கச்சார்புத்தன்மை அதிகரிக்க முடியும் 5. சட்ட நிலைமைகளுக்கேற்ப கருமமாற்ற முடிதல்
6. நிறுவனத்தினது அனைத்து கிரயமும் குறைக்க முடியும்
7. வாடிக்கையாளரின் கேள்வி அதிகரித்து விற்பனையை அத்கரிக்க முடியும்
8.இலாபத்தன்மை உச்சப்படுத்தி நிறுவனத்தின் வாழ்தன்மையை உறுதிப்படுத்த முடியும்
9. சந்தையில் இலகுவாக பிரவேசிக்க முடியும் (1x4= 4புள்ளிகள்)

ii. அ. 1. ABC பகுப்பாய்வு / HML முறை
2. இரட்டைக் கொள்கலன் முறை /
3. தொடர்இருப்பு அறிக்கைப்படுத்தும் முறை
4. கணினி நிகழ்ச்சித்திட்ட முறை
5. JIT முறை / உரியநேர தந்திரோபாய முறை (½x4 = 2புள்ளிகள்)

ஆ. 1. காலப்பகுதிக்குரிய பொருள் நுகர்வு
2. மறுகட்டளைக் காலம்
3. மறுகட்டளைத் தொகை
4. முதன்மைக் காலம் (1x 2= 2புள்ளிகள்)

iii. அ. 1. வளச் சந்தை / காரணிச் சந்தை
2. உற்பத்தியாளர் சந்தை / பொருட் சந்தை
3. அரச சந்தை
4. நுகர்வோர் சந்தை
5. இடை நடுவர் சந்தை (½x4 = 2புள்ளிகள்)

ஆ. நிறுவனமொன்று தனது விளம்பர நடவடிக்கைகளை பணம் செலுத்தி பயன்படுத்தும் ஊடகங்கள் செலுத்தப்பட்ட ஊடகம் எனப்படும்.
உ-ம் தொலைக்கர்ச்சி, சஞ்சிகை, நேரடிக் கச்சேரிகள், வியாபார விளம்பரப்பலகை போன்ற ஊடகங்கள்.

மாறாக நிறுவனமொன்று தனக்குரிய வெப்தளம், முகநூல் போன்ற ஊடகங்களில் வெளியிடப்படுகின்ற அறிவித்தல் உரிமையாக்கப்பட்ட ஊடகம் எனப்படும். (2புள்ளிகள்)

iv. 1. நுகர்வோர் விருப்பங்களை சிறப்பாக நிறைவேற்றக் கூடிய வகையில் உற்பத்திப் பொருளொன்றை - சந்தைக்கு முன்வைப்பதற்கு முடிவதனால் விற்பனைப் புரள்வினை அதிகரித்துக்கொள்ள முடிதல்.
2. உற்பத்திப் பொருளுக்குரிய போட்டி நிலமைகளுக்கு முகங்கொடுக்கக்கூடிய முறையில்

விலை - குறிக்கப் படுவதன் மூலம் நுகர்வோரைக் கவரக்கூடியதாக இருத்தல்.
3. பல்வேறு மேம்பாட்டு உத்திகள் பிரயோகிக்கப்பட்டு பொருட்களை கொள்வனவு செய்வதற்கு ஊக்கு - விக்கக் கூடியதாயிருத்தல்.
4. நுகர்வோனுக்கு உற்பத்திப் பொருட்களை மிக இலகுவாக கொள்வனவு செய்யக்கூடியவாறு - அப்பொருட்களை விரியோகித்தல்
5. பொதுவாக நிறுவனத்தின் நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்வதற்கு சந்தைப்படுத்தல் கலவையின் - சகல மாறிகளும் துணையாக அமைகின்றன.
(4x 1= 4 புள்ளிகள்)

v. அ. உற்பத்திகளை கொள்வனவு செய்வதற்கு நுகர்வோர் செலுத்தும் பண ரீதியான பெறுமதி விலையாகும். -
(2புள்ளிகள்)

ஆ. 1. பொருளின் தன்மை
2. சந்தையின் தன்மை
3. போட்டியாளர்களின் விநியோக வழிமுறைகள்
4. உற்பத்தியாளரின் பலம்.
5. கேள்வியின் தன்மை (½x4 = 2புள்ளிகள்)

## வினா இல – 07

i. அ. A. 40% B. 30% C. 2 : 1 D. 3 தடவை (½x4 = 2புள்ளிகள்)

ஆ. A. திரவத் தன்மை :- வணிகத்தின் போதுமான திரவத்தன்மையினைக் காட்டுகின்றது

B. இருப்புப் புரள்வு :- 3 தடவைகள் என்பது நிறுவனத்தின் சாதக நிலையினைக் காட்டுவதாக அமைகின்றது. அதாவது வினைத்திறனான முகாமைத்துவ செயற்பாட்டின் மூலம் இருப்பு சரியான முறையில் பேணப்படுகிறது. (1x 2= 2புள்ளிகள்)

ii. அ. <u>அனுகூலங்கள்</u>

1. ஊழியர்கள் தூண்டப்படல்
2. சிறந்த ஊழியர் இடைத்தொடர்பு
3. பொருத்தமான ஊழியர்களை வைத்துக்கொள்ள முடிதல்
4. ஆட்சேர்ப்புக்கான செலவு குறைவு (½x4 = 2புள்ளிகள்)

<u>வரையறைகள்</u>

1. அடிப்படையில் நவீன அறிவு உட்பாச்சப்படாதிருத்தல்
2. பயிற்சிக்காக செலவிடும் செலவுகள் அதிகம்
3. ஊழியர்களுக்கிடையிலான போட்டித் தன்மை
4. பொருத்தமான ஊழியரை பெற்றுக் கொள்ளும் வாய்ப்பு குறைவு (½x4 = 2புள்ளிகள்)

iii. 1. பதவியின் பெயர்
2. நிறுவனத்தின் பெயர்
3. வயதெல்லை
4. சேவை நிபந்தனை
5. கல்வி மற்றும் தொழில் தகமைகள்
6. அனுபவம்
(4எழுதினால் = 2புள்ளி)

7. சம்பளத்திட்டம்
(6எழுதினால் = 4புள்ளி)

iv. அ. 1. வங்கிகளுக்கிடையிலான அழைப்புக்கடன் சந்தை
2. உள்நாட்டு, வெளிநாட்டு செலாவாணிச் சந்தை
3. அரச பிணைப்பத்திரச் சந்தை
4. கம்பனி தொகுதிக்கடன் பிணைப்பத்திரச் சந்தை
5. பங்குச் சந்தை (½x4 = 2புள்ளிகள்)

ஆ. 1. கூறப்பட்ட மூலதனம் 500மில்லியனுக்கு குறையாது இருத்தல்
2. குறைந்தது மூன்று வருடம் வரிக்கு முன்னதான இலாபம் உழைத்திருத்தல்
3. வழங்கப்பட்ட பங்குகளின் பெறுமதி குறைந்தது 25% பொதுமக்களுடையதாக இருத்தல் 4.
(1x2= 2புள்ளிகள்)

v. அ. 1. வகைப்படுத்தல்
2. தெரிவு செய்தல்
3. கணித்தல்
4. பொழிப்பாக்கல் (½x4 = 2புள்ளிகள்)

ஆ. 1. E.S.S
2. D.S.S
3. M.I.S
4. O.A.S
5. K.W.S
6. T.P.S
7. B.I.S (½x4 = 2புள்ளிகள்)

## வினா இல – 08

i. அ. 1. விண்ணப்பங்களை மதிப்பிடல்
2. நேர்முகப்பரீட்சை
3. நுண்ணறிவுப் பரீட்சை
3. ஆளுமைப் பரீட்சை
5. செய்முறைப் பரீட்சை
6. வைத்திய பரிசோதனை
7. பின்னணிப் பரிசோதனை (½x4 = 2புள்ளிகள்)

ii. அ. 1. வேலை தொடர்பான நியமங்கள்
2. வேலை தொடர்பான கருமங்கள்
3. வேலை தொடர்பான நிபந்தனைகள்
4. வேலை தொடர்பான கடமைகளும், பொறுப்புக்களும் (½x4 = 2புள்ளிகள்)

ஆ. 1. கிரயம் குறைவாக இருத்தல்
2. பெற்றுக்கொள்வது இலகுவானது
3. மீளச்செலுத்த வேண்டிய தேவையில்லை
4. வணிகப் பொறுப்புக்கள் அதிகரிக்காமை
5. விசேட நிபந்தனைகளுக்குட்பட வேண்டிய அவசியமில்லை (½x4 = 2புள்ளிகள்)

iii. அ. 1. மிகச்சரியான தீர்மானங்களை எடுக்க முடிதலும் இலகுவாதலும்
2. தவறுகள் குறைவாக இருந்தாலும் நம்பகத்தன்மை அதிகரித்தல்
3. வெளியீடுகளின் தரரீயான பண்பு உயர்வடைதல்
4. செயன்முறைகள் வினைத்திறனாக மேற்கொள்ள முடிதல்
5. செலவு குறைவடைதல்

6. போட்டி நிலமைகளுக்கு முகங்கொடுக்க முடிதல்
7. தொடர்பாடல் செயன்முறைகள் இலகுவாக இருத்தல் (1x2 = 2புள்ளிகள்)

ஆ. 1. E – Mail வசதிகள்
2. இலத்திரனியல் கூட்டங்கள்
3. வெப்தளங்களை பார்வையிடல்
4. வானொலி ஒலிபரப்புக்களை கண்டுகளிக்கும் வசதிகள்
5. ஈ - செய்திகள்
6. ஈ - நூல் நிலையம்
7. தொலைபேசி வசதிகள்
8. ஈ - வைத்திய சேவை
9. சேவைப் பரிமாற்றம் (½x4 = 2புள்ளிகள்)

iv. அ. 1. நடைமுறையல்லாத சொத்துக்களின் தேவைப்பாடு
2. மூலப்பொருள் தேவைப்பாடு
3. ஊழியர் தேவைப்பாடு
4. உற்பத்தி பொதுமேந்தலைக் கிரயம்
5. தொழிற்சாலையின் தள அமைப்புத்திட்டம்
6. கழிவுப்பொருள் அகற்றல்
7. சமூகம் மற்றும் சூழல் தாக்கங்கள்
8. மொத்த உற்பத்திக் கிரயமும் அலகுக்கிரயமும்
9. வணிகத்தை ஆரம்பிப்பதற்கு முன்னர் செயற்பாட்டுக்கிரயம் (½x4 = 2புள்ளிகள்)

ஆ. 1. ஆய்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக ஏற்படும் செலவுகள்
2. வணிகத்தைப் பதிவுசெய்வதற்காக ஏற்படும் செலவுகள்
3. மூலதன ஈட்டலுக்காக ஏற்படும் செலவுகள்
4. தேவையான நடைமுறையல்லாச் சொத்துக்களை கையகப் படுத்திக் கொள்வதற்காக ஏற்படும் - செலவுகள்
(½x4 = 2புள்ளிகள்)

v. மதிப்பிடப்பட்ட செயற்றிட்ட கிரயம், மதிப்பிடப்பட்ட வருமானக்கூற்று, மதிப்பிடப்பட்ட காசுப்பாச்சற் கூற்று, கடன் மீளச்செலுத்தும் அட்டவணை, மதிப்பிடப்பட்ட நிதிநிலமைக் கூற்று போன்றவற்றில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள தகவல்களின் பொழிப்பாக்கிக் காட்டும் அட்டவணையே செயற்றிட்ட சுருக்கம் எனப்படும்.
(2புள்ளிகள்)

1. மதிப்பிடப்பட்ட கிரயம்
2. வருமானக் கூற்று
3. காசுப்பாச்சற் கூற்று
4. கடன்படடோர் செலுத்தும் அட்டவணை
5. மதிப்பிடப்பட்ட நிதிநிலமைக்கூற்று (½x4 = 2புள்ளிகள்)